*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **30 மே, 2025**

## பத்திரிகை செய்தி

இரண்டு நாள் அரசு முறை பயணமாக மாஹே சென்றுள்ள மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் P.M. ஸ்ரீ உஸ்மான் அரசு உயர்நிலைப் பள்ளியில் நிறுவப்பட்டுள்ள புகழ்பெற்ற மையழி விடுதலைப் போராட்ட வீரர் P.K. உஸ்மான் மாஸ்டர் அவர்களின் மார்பளவு சிலையை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாஹே கூட்டுறவு கல்வியியல் கல்லூரி மற்றும் மாஹே கூட்டுறவு உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

முன்னதாக மாஹே மண்டல நிர்வாக அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மாஹே பகுதியில், அரசு துறைகள் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் பரம்பத், மாஹே மண்டல நிர்வாக அதிகாரி திரு மோகன் குமார், நகராட்சி ஆணையர் திரு சதேந்திர சிங் மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.